பக்கங்கள் 8

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 23 | பங்குனி 19 | ஜ. அவ்வல் 25 | இதழ் 50

யாழ்ப்பாணம் | புதன்கிழமை | 1 - 4 - 81

## சூடுபட்ட யு. எஸ். அதிபர் ஆபத்தைக் கடந்துவிட்டார்

வாஷிங்டன், மார்ச் 31


துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான அமெரிக்க ஜனாதிபதி திரு. ரொனால்ட் றீகன் ஆபத்தான கட்டத்தைத் தாண்டி குணமடைந்துவருகிறார் என்று வாஷிங்டன் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

மூன்று மணித்தியால அவசர சத்திர சிகிச்சைக்குப்பின்னர் ஜனாதிபதி றீகனின் இடது சுவாசப்பையிலிருந்து துப்பாக்கி ரவையொன்று அகற்றப்பட்டுள்ளது.

சத்திரசிகிச்சை முடிந்த இரண்டரை மணித்தியாலத்தின்பின்னர் றீகன் டாக்டர்களுடனும், குடும்பத்தவர்களுடனும் குதூகலமாகக்கலந்து உரையாடியதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. திரு றீகன்பூரணகுணமடைந்து வழமைக்குத்திரும்ப சுமார்

(5-ம் பக்கம் பார்க்க)

# கோப்பாய் எம். பி. சென்னையில் மரணம்!



## பூதவுடல் இன்றுமாலை வருகிறது

(யாழ்ப்பாணம்)

**தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரும் கோப்பாய்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரும் சிறந்த தமிழ் அறிஞருமான திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை நேற்று மாலை சென்னையில் காலமானார் என்பதை மிகவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.**

**காலமான திரு. கதிரவேலுப்பிள்ளையின் பூதவுடல் இன்று மாலை 7-30 மணியளவில் ஏயர் லங்கா விமானத்தில் கட்டுநாயக்காவுக்கு வந்து சேருமென்றும் வியாழக்கிழமை காலையில் யாழ்ப்பாணம் கொண்டுவரப்படும் என்றும் தெரிகின்றது.**

கடந்த 24ம் திகதி தமிழ் நாட்டுக்குச் சென்ற திரு. கதிரவேலுப்பிள்ளை நேற்று மாலை சுகவீனமுற்றதால் தனியார் மருத்துவமனையொன்றில் அவசரமாக அனுமதிக்கப்பட்டார்.

தமிழ்நாடு மேலவை உறுப்பினர் திரு. ஜனார்த்தனன் திரு. [illegible]லுப்பிள்ளையை சென் [illegible] வெலிங்டன் மருத்துவ[illegible]யில் பிற்பகல் ஒரு மணிக்கு அனுமதித்தார் என்றும் மாலை 4 மணிக்கு அவர் [illegible] பிரிந்து விட்டதாகவும் திரு. ஜனார்த்தனன் தகவல் கொடுத்துள்ளார்.

திரு. கதிரவேலுப்பிள்ளையின் பூதவுடலைக் கொண்டு வருதற்காக தமிழர் விடுதலைக்கூட்டணித்தலைவர் திரு எம். சிவசிதம்பரமும், திரு வி என். நவரத்தினமும் சென்னைக்குச் செல்லவிருந்தபோதிலும் சடலத்தை இங்கு கொண்டு வருவதற்கு அங்குள்ள தமிழ் அன்பர்களே ஏற்பாடு செய்து விட்டதால் இவர்கள் போகவில்லை.

திரு கதிரவேலுப்பிள்ளையின் சடலத்தை கொழும்பிலிருந்து விமானத்தில் யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுவதாகத் தெரிகின்றது.

1924ம் ஆண்டு அக்டோபர் மாதம் 29ம் திகதி பிறந்த திரு. கதிரவேலுப்பிள்ளை இலங்கைப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானத்துறையில் பட்டம் பெற்றதின்பின் சட்டக்கல்லூரியில் சேர்ந்து சட்டம் பயின்றார். சிறந்த சிவில் வழக்கறிஞராகத் தொழில் புரிந்த அவர் அரசியல்துறையில் ஆழ்ந்த பாண்டித்தியம் பெற்றவராய் விளங்கினார். தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டாரங்களில் அவர் 'சிந்தனைச் சிற்பி' என அழைக்கப்பட்டார். 1961ம் ஆண்டு சத்தியாக்கிரகத்தின் போது தடுப்புக்காவலில்வைக்கப்பட்ட சமயம் உமார் கயாமின் கவிதைகளை அழகியதமிழில் மொழியாக்கம் செய்தார்.

1960ம் ஆண்டில் மார்ச் ஜூலை மாதங்களில் நடந்த தேர்தல்களில் தமிழரசுக்கட்சி சார்பில் யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார். 1665ம் ஆண்டு கோப்பாய்த் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அது முதற்கொண்டு தொடர்ந்தும் அத்தொகுதியை அவர் பிரதிநிதித்துவம் செய்து வந்தார்.

திரு கதிரவேலுப்பிள்ளையின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் இன்று அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### வி. என். அனுதாபம்

(கொழும்பு)

'எமது இயக்கத்தில் மனஉறுதி தளராத, பாதையைத் தெளிவாகத் தெரிந்த விடுதலையில் அமைதியாக பரிபூரணமாக தம்மையே அர்ப்பணித்து உழைத்தார் உழைப்பின் பெரும்பகுதியை மற்றவர் அறியாதவிதத்தில் இயக்கத்துக்கு செலவிட்டவர்'' என்று சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் திரு வி என். நவரத்தினம் விடுத்த அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்

### யாழ். மேயர்செய்தி

''தமது நோயுற்ற உடலையும் பொருட்படுத்தாது தாயக மண்ணின் மீட்பு ஒன்றை எண்ணியே அவர் இந்தியாவுக்குச் சென்றிருந்தார் என்று அறியும்போது எமது துக்கம் இரட்டிப்பாகின்றது.

தமிழ்ப்பேசும் மக்களின் விடுதலைப் பயணம் துரிதப்படுத்தப்படவேண்டுமென்பதே அவரது வேணவாவாக எப்தும் இருந்து வந்தது''

இவ்வாறு யாழ். மேயர் திரு. இராஜா விசுவநாதன் தமது அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### துணிச்சலுடன் கருத்து சொன்னவர்

(யாழ்ப்பாணம்)

''பிரிவினைக் கோரிக்கைக்குத் தடை விதிக்கப்படவேண்டுமென்று தென்பகுதியில் குரல் எழுப்பப்பட்ட பொழுது, நாம் பிரிவினையைக் கோரவில்லை நாம் இழந்துவிட்ட எமது ஆட்சியையே கேட்கிறோம் என்று துணிச்சலுடன் குரல்கொடுத்தவர் திரு. கதிரவேலுப்பிள்ளை'

இவ்வாறு முன்னாள் செனட்டரும் தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர்களில் ஒருவருமான திரு. சு. நடராஜா விடுத்த அனுதாபச் செய்தியில் கூறினார்.

### வவனியாக்கூட்டம் நிறுத்தப்பட்டது

(வவுனியா)

வவுனியாவில் குடியிருப்பு என்ற இடத்தில் நடைபெற்ற தமிழர்விடுதலைக் கூட்டணியின் இராமயாத்திரையையொட்டிய கூட்டம் இடையில் நிறுத்தப்பட்டது.

கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளையின் மறைவுச் செய்தி அக் கூட்டத்தில் யாழ் எம். பி. திரு. வி. யோகேஸ்வரனால் அறிவிக்கப்பட்டது.

இயக்கத்துக்காகத் தன்னை அர்ப்பணித்த ஒரு தலைவரை தமிழினம் இழந்துவிட்டதாக திரு. யோகேஸ்வரன் தெரிவித்தார்.

## மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல்: ஐ.தே.க. வேட்பாளர்களுக்கு நேர்முகப் பரீட்சை!

### 'பெஸ்டஸ்' தலைமையில் நடந்தது

(யாழ்ப்பாணம்)

மாவட்ட அபிவிருத்திச் சபைத்தேர்தலில் யாழ். மாவட்டத்தில் ஐக்கியதேசியக்கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப்பரீட்சை கிங்ஸ்கவுசில் நேற்றுக்காலை நடைபெற்றது

இந்த நேர்முகப்பரீட்சையை மீன்பிடி அபிவிருத்தி அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா யாழ். மாவட்ட அமைச்சர் திரு யு. பி. விஜயக்கோன் ஆகியோர் நடாத்தினர்.

ஐக்கியதேசியக்கட்சியின் முக்கிய பிரமுகர்கள் உட்பட சுமார் 100 பேர் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்திருந்தனர்.

இவர்களுள் பருத்தித்துறை நகரசபை உறுப்பினர் திரு. சந்திரசேகரம், ஊர்காவற்றுறை முன்னாள் வேட்பாளர் ம அமிர்தலிங்கம், எஸ். ஜே. அரோலசியஸ், திரு ஜி இராஜசூரியர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

அபேட்சகர்களை தெரிவு செய்வதற்கான இறுதிமுடிவு ஐக்கியதேசியக்கட்சியின் தலைமைச்செயலகத்தில் நடைபெறவுள்ளதாகத் தெரியவருகின்றது. (சித்-நி)

ஹோம்பினன்ஸ்
லிமிட்.
82, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
வருடாந்தம் ஆகக்கூடுதலான
25% வட்டியை
வழங்குகின்றது
ரூபா 1000/-க்கு மேற்பட்ட
எந்த முதலீட்டிற்கும்
மாதாந்தம் வட்டி வழங்கப்படும்
1981-1-1இல் எம்மிடம் இருந்த வைப்பாளர்
அனைவருக்கும் வைப்பு-முடிவு காலத்தில்
3% மேலதிக போனஸ்
எமது லாபத்தில் இருந்து வழங்கப்படும்.
உங்கள் பணத்தை விவேகமாக
முதலீடு செய்யுங்கள்
தலைமையகம்:
463, காலி வீதி, கொழும்பு-3
தொலைபேசி: 89190

# வரி விளம்பரம்


## சேவை

உங்கள் வீடுகளிலுள்ள சகல மின் இயந்திர உபகரணங்களும் (ரேடியோ, கஸட், மின் அடுப்பு, மின் விசிறி, குளிர்சாதனப் பெட்டி) கைதேர்ந்த தொழில் நுட்ப வல்லுநர்களால் வீடுகளில் வைத்தே திருத்திக் கொடுக்கப்படும். விபரங்கட்கு தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்: மு. ரூபேந்திரன், நவரத்தினராசா வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

(8694)

## தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான வர்த்தக நிறுவனத்திற்கு அனுபவம் வாய்ந்த விற்பனையாளர்கள் தேவை. நேரில் வரவும். Rajan Fancy House, 51, Model Market, Jaffna.

(8744)

முன் அனுபவமும் துடிப்புமுள்ள வடமாகாணம் முழுவதும் சென்று கடமையாற்றக் கூடிய விற்பனைப் பிரதிநிதியொருவர் வடபகுதியிலுள்ள உலோகவேலைத் தொழிற்சாலைக்கு தேவை. 40 வயதிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும். சகல விபரங்களுடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 8734, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம்.

8734

## விற்பனைக்கு

நல்ல நிலைமையில் உள்ள 6 சிறி தொடர் இலக்கமுள்ள லம்பிரட்டா D L ஸ்கூட்டர் உடன் விற்பனைக்குண்டு. சி. பாலச்சந்திரன், 125, சிவன் கோவில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம். (8738)

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் சிவகுருநாதர் வீதியின் முனையின் தெற்குப்பக்கமாக உள்ள இரண்டாவது காணித் துண்டுகளில் ஒரு பகுதியாகிய பரப்பு 1½ வீட்டு நிலம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 144/4, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (8731)

ஆனைக்கோட்டை மானிப்பாய் பிரதான வீதிக்கு அருகாமையில் 7½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்! ''பூமணிவில்லா'' ஆனைக்கோட்டை. (8739)

## சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் சுன்னாகம் (வரையுள்ளது)

## பதவி வெற்றிடங்கள்

மேற்படி சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு சங்க எல்லைப்பரப்பில் வசிக்கும் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1, காசாளர் தரம் 1
2 பிரதம லிகிதர் தரம் 1

விண்ணப்ப முடிவுத் திகதி 15-04-1981.

மேலும் இப்பதவிகள் சம்பந்தமான விபரங்களையும், விண்ணப்பப்படிவங்களையும், ரூபா 2/- செலுத்தி காரியாலய நேரத்தில் சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

சங்கப் பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பொது முகாமையாளர்.
சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்,
30-03-1981. (8743)


# ''உயிர்வளர்ச்சிக்கு அவசியம் கடவுள்வழிபாடு தேவை''

(புங்குடுதீவு)

''நம் வாழ்நாள் பொழுதில் ஒரு பகுதி நேரத்தையேனும் ஒதுக்கி இறை சிந்தனையில் ஈடுபடுவோமாயின் எமக்குஎதுவித இடுக்கணும் ஏற்படமாட்டாது. இறை சிந்தனைக்கு எம்மை இட்டுச் செல்லுந் தன்மை நம் முன்னோரளித்த அருஞ் செல்வமாகிய சமய இலக்கியங்களுக்கேயுண்டு'',

இவ்வாறு புங்குடுதீவு மடத்துவெளி ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி கோயிலில் இடம்பெற்ற மலர் வெளியீட்டு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் சட்டத்தரணி திரு. எஸ். கே. மகேந்திரன் குறிப்பிட்டார்.

கும்பாபிஷேக மலரின் பிரதியை திரு. நா. க. மயில்வாகனம் வெளியிட கொழும்பு பிரபல தொழிலதிபர் திரு. வி, ரி. வி. தெய்வநாயகம்பிள்ளை பெற்றுக்கொண்டார்.

திரு. எஸ் கே. மகேந்திரன் மேலும் பேசுகையில், ''சமயம் தேவையா என்று கேட்பவர் இக்காலத்திலும் இல்லாமல் இல்லை. உடல் வளர்ச்சிக்கு உணவு தேவையா என்று கேட்பவரைக்கண்டால் நமக்கு என்ன பதில் கூறத்தோன்றுமோ அதே உணர்வுதான் சமயம் வேண்டுமா என்று கேட்பவரைக் கண்டாலும் எமக்கு ஏற்படுகின்றது. உடல் வளர்ச்சிக்கு உணவுதேவை. அதுவும் வேளையும் காலமும் தவறாமல் தேவை. அதைப் போலவே உயிர் வளர்ச்சிக்கும் கடவுள் வழிபாடு இன்றியமையாதது'' என்றார். (கு)

## விஜயம்

(உடுப்பிட்டி)

யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும், யாழ். அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி நாளை உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள கப்புதூ கிராமத்திற்குவிஜயம் செய்யவுள்ளார்.


## கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி பரிசளிப்பு விழா-1981

காலம்: 2-4-1981 வியாழக்கிழமை
நேரம்: பிற்பகல் 4-30 மணி
இடம்: கல்லூரி மைதானம்

பிரதம விருந்தினர்:
**கலாநிதி க. கைலாசபதி அவர்கள்**

பரிசில்கள் வழங்குபவர்:
**திருமதி க. கைலாசபதி**

அன்பர்கள், ஆதரவாளர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

(8742)


# ''சாதிமுறையை பயன்படுத்தி அரசியல் உயர்ச்சி பெறும்பண்பு!''

## பொதுக் கூட்டத்தில் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

''பல படிகளாக அமைந்துள்ள சாதிமுறையைப்பயன்படுத்தி, அரசியல் உயர்ச்சி பெறும் பண்பு தமிழனுக்குப் புதிதல்ல. தங்கள் முன்னோர் காட்டிய வழியிலேயே இன்றுள்ள இளம் தலைமுறையினரும் தங்கள் அரசியல் வேலைகளுக்கு உரம்தேடும் இச் செயலுக்கு திரு இராசலிங்கத்தை பலியாக்கி உள்ளது ஆச்சரியத்திற்குரிய தொன்றுமல்ல? என்று கெருடாவில் விவேகானந்த சனசமூக நிலையத்தின் 18 வது ஆண்டுநிறைவையொட்டி நடந்த கலையரங்குப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய வெகுஜன இயக்க அமைப்பாளர் திரு. கே டானியல் குறிப்பிட்டார்.

திரு. க. முத்து தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திரு டானியல் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது!

''அரசியல் அரசியலாகவே பார்க்கும் பண்பினை மீறி, அதற்கு உதவிக்கு சாதிப் பெயரைப் பயன் படுத்துபவர்களும் அரசியல் அறிவுப் பஞ்சம் உடையவர்கள்தான் என்பது இதனால் புலனாகிறது.

இந்தச் செயல் எங்கிருந்து வரினும்: அது தாட்சண்யமின்றி கண்டிக்கப்பட வேண்டியது, தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் நடவடிக்கைகளில் அபிப்பிராய பேதம் கொண்டிருப்பவர்கள் அந்த அபிப்பிராய பேதங்களை அந்தந்த மட்டங்களில் தான் தீர்த்துக் கொள்ள வேண்டுமே தவிர வரம்பு மீறிய பேச்சுக்களையும் செயல்களையும் கட்டவிழ்த்து விடுவது மிகப்பிழையானது!.

''தீண்டாமை ஒழிப்புவெகுஜன இயக்கத்தின் பாதையினால் எழுச்சி கொண்ட ஒடுக்கப்பட்ட மக்களை திசை திருப்பும் முயற்சியில் வெற்றி காணாமல் போகவே தோல்வி கண்ட திரு. இராசலிங்கத்தின் உள் இயக்கப் பிரிவினர்கள் திரு. இராசலிங்கத்தை சாட முற்பட்டனர் போல் தெரிகிறது. வெகுஜன இயக்கம் காட்டிய வெற்றிப்பாதைக்கு அவர் உறுதியாகத் திருப்பிவிட வேண்டும், அப்படி அவர் தனது நிலையை மாற்றிக் கொள்வாரேயானால் அவரால் குறிப்பிடப்பட்டது போல் ஐந்து லட்சத்துக்கும் அதிகமான மக்கள், ஆபிரிக்க சலூட்பின மக்களை விட வீறு கொண்டு எழுந்து நிற்பார்கள் என்பதில் எமக்கு ஐயமில்லை,'' என்று கூறினார்.

கூட்டத்தில் திருவாளர்கள் கே கிருஷ்ணபிள்ளை, கே. தங்கவடிவேல், எஸ், அலெக்ஸாண்டர், ஆசிரியர் கணேசமூர்த்தி ஆகியோரும் உரையாற்றினர்.

மேடைக்கு வந்திருந்த திரு. இராசலிங்கம் அவர்கள் உடல் நலன் குறைவு காரணமாக விழாச்சிறப்புற வாழ்த்தி தனது உரையை முடித்துக் கொண்டார், கெருடாவில் மக்கள் சார்பில் அவரிடம் மகஜர் ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டது.

## எதிரிகள் விடுதலை

(கொழும்பு)

திருமணமான இளம் பெண்ணை பலாத்காரம் செய்ததாக குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கில் மூன்றுசந்தேக நபர்களும் விடுதலைசெய்யப்பட்டனர்.

இவ் வழக்குகன்கொடவில்லை எஸ். ஐ. இமாம் முன்னிலையில் நடைபெற்றது.

இவ் வழக்கில் கன்கொடவில்லையில் 1979 அக்டோபர் 31ம் திகதி கு. சுமாவதி என்ற இளம்பெண்ணை பலாத்காரம் செய்ததாக எல். விஜயரத்ன, எஸ். ஹெட்டியராச்சி, ஆ. ஜெயர்த்தன ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஜி, ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்) சட்டத்தரணி டொனல்ட் ரணசிங்கா வின் அனுசரணையுடன் ஆஜரானார் (கு)


## கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனம்

புதிய விற்பனை நிலையம்

மன்னார்

தலைமன்னார் வீதியில்

இன்று

1981, ஏப்ரல் 1-ந் திகதி

உள்ளூர், வீடமைப்பு, நிர்மாணத்துறை பிரதி அமைச்சர்

**திரு. P. C. இம்புலான**

அவர்களால்

திறந்து வைக்கப்படவிருப்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றனர்

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்

8740


## நிர்வாகிக[illegible]

(அரியாலை)

யாழ்ப்பாண திருச்சபை சுவிசேஷ சங்கத்தின் 42-வது வருட நிர்வாகிகள் தெரிவில் தலைவராக யாழ்ப்பாண அர்ச் மக்கள் அருட் திரு சாம். டி. ஹோரர் சிங்டன் அடிகளாரும், உபதலைவராக திரு. சாம். எஸ். சதாசிவனும், பொதுச்செயலாளராக திரு, எஸ் பி. ஜீவானந்தமும், பொருளாளராக திரு. எம். சி. பிரான்சிஸ[illegible] ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். (அ)

## சித்தசுயாதீனமற்ற இளம்பெண் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

மனநோயாளி கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலைசெய்து கொண்டார். புங்குடுதீவு 7-ம் வட்டாரத்தைச் சேர்ந்த விசுவலிங்கம் புஷ்பலீலாவதி என்ற (32 வயது) பெண்ணே தற்கொலைசெய்துகொண்டவராவார்.

இவருடைய மரணவிசாரணையை நடாத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. அ. நமசிவாயம் சாட்சியங்களைப் பதிவு செய்து கொண்டு தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கினார். (சித், நி)


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க.

# அமெரிக்க ஜனதிபதி றீகன்மீது துப்பாக்கிச் சூடு!

## மார்பில் குண்டு பாய்ந்தது! மயிரிழையில் உயிர் தப்பினர்

வாஷிங்டன், மார்ச் 31

அமெரிக்க ஜனதிபதி திரு. றெனல்ட் றீகனை படுகொலை செய்யவாஷிங்டனில் மேற்கொள்ளப்பட்ட முயற்சியின்போது அவர் மார்பில் சுடப்பட்டு காயமடைந்தார்.

இச்சம்பவத்தின்போது திரு. றீகனின் மார்பின்மீது பாய்ந்த துப்பாக்கி ரவை அவசர சத்திரசிகிச்சையின் மூலம் அகற்றப்பட்டது. இவரின் உடல்நிலை திருப்திகரமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தொழிற்சங்க மகாநாடு ஒன்றில் கலந்துகொண்டுவிட்டு, வாஷிங்டனிலுள்ள ஹோட்டல் ஒன்றிலிருந்து திரு றீகன் புறப்பட்டுக்கொண்டிருந்தபோதே அவரின் மார்பை நோக்கிச் சுடப்பட்டது. இதனைத் தொடர்ந்து றீகன் உடனடியாக அவசர சத்திரசிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டார்.


சுடப்பட்ட துப்பாக்கிரவை ஒன்று இவரின் சுவாசப் பையைக் காயப்படுத்தியுள்ளது. ஆஸ்பத்திரியில் ஜனதிபதி றீகனுக்கருகில் அவரின் பாரியார் இருந்து கவனித்து வருகிறர்.

இச்சம்பவத்தின்போது திரு. றீகனின் பத்திரிகைச்செயலாளர் திரு. ஜேம்ஸ்பிரெய்லி உட்பட மூவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இப்படுகொலை முயற்சி தொடர்பாக ஜோன் கிங்லி என்ற 22 வயதுநபர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் பட்டப்படிப்பை முடிக்காது வேல்ஸ் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறியுள்ளார்.

ஜனதிபதி றீகனுடன் சென்ற குழுவினர் மீது நான்கு அல்லது ஆறு தடவைகள் சுடப்பட்டுள்ளன.

றீகனின் பத்திரிகைச்செயலாளர் ஜேம்ஸ் பிரெய்லியின் தலைமீது சுடப்பட்டதென்றும் தெரிவிக்கப்பட்டது. இவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக வெள்ளைமாளிகை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். காயமடைந்த ஏனையவர்களின் நிலைமை பற்றி உடனடியாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை.



இதனைத் தொடர்ந்து வெள்ளைமாளிகையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம் படுத்தப்பட்டுள்ளன. (வெ)

## இணற்றிலிருந்து வெளிப்பட்ட தங்க நாணயங்கள்!

சென்னை, மார்ச், 31

செங்கல்பட்டு மாவட்டம் பெரியபாளையத்திலுள்ள தொழிலாளி ஒருவரிடமிருந்து பொலிசார் நாற்பத்துமூன்று பழங்கால தங்க நாணயங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

இந்த நாணயங்களின் பெறுமதி 43,000 ரூபாவாகும். இத்தொழிலாளி கிணறு ஒன்றை வெட்டிக்கொண்டிருந்தபோது இந்நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

நாணயத்தின் ஒரு பக்கத்தில் ஸ்ரீமகாவிஷ்ணு, ஸ்ரீமகாலட்சுமி, வில்லுடன் கூடிய ஸ்ரீராமர் ஆகியோரின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

நாணயத்தின் மற்றப் பக்கத்தில் நட்சத்திரமொன்று பொறிக்கப்பட்டுள்ளது. (வெ)

## அமெரிக்க நிதியுதவி அதிகரிப்பு

டோக்கியோ, மார்ச். 31

தென்கொரியாவுக்கு அமெரிக்கா தனது நிதியுதவியை அதிகரிக்க முடிவுசெய்துள்ளது.

1982ம் நிதியாண்டில் தென்கொரியாவுக்கு உதவுவதற்கு வரவு-செலவுத்திட்டத்திலிருந்து 1,600 லட்சம் டாலர்கள் வேண்டுமென அமெரிக்க அரசு கோரியுள்ளது என்று தென் கிழக்காசிய பசுபிக் விவகாரங்களுக்கான அமெரிக்கராஜாங்க உதவிச்செயலாளர் மைக்கேல் ஆர்மகோஸ்ட், சர்வதேச உறவுகளுக்கான கமிட்டியின் உபகமிட்டியில் பேசுகையில் கூறினர்.

## யாழ்.கூட்டுறவுத்துறைமுகச் சேவைச் சமாச நிர்வாகசபையினருக்கு இடைக்காலத் தடை!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூட்டுறவுத் துறைமுகச் சேவைச் சமாசத்தின் நிர்வாக சபை அங்கத்தவர்களை தொடர்ந்து கடமையாற்றக்கூடாதென்று இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். மக்கள் துறைமுகத் தொழிலாளர் பொதுச்சேவைக் கூட்டுறவுச் சங்கம், தெல்மராட்சி கூட்டுறவுத் தொழிலாளர் சங்கம், வடபகுதி றவிகுமாஸ்தா கூட்டுறவுச் சங்கம் ஆகியவை கூடி யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு ஒன்றைத் தொடர்ந்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிர்வாகசபை அங்கத்தவர்களை இடைக்காலத் தடைக் கட்டளை விண்ணப்பத்தின் விசாரணை முடியும்வரை கடமையாற்றக்கூடாதெனவும் 27-12-80 க்குப் பின்னர் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் எதையும் செயற்படுத்தக்கூடாதென்றும் இடைக்காலத்தடை விதிக்குமாறு மனுவில் கோரப்பட்டிருந்தது.

விசாரணை நடாத்திய யாழ். மாவட்ட நீதிபதி திரு கே. பாலகிட்டினர் இதற்கான தடை உத்தரவைப் பிறப்பித்தார். (கு)

## சம்பளம் இல்லையாம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பனம்பொருள் பயிற்சி நிலையத்தில் கடந்த வருடம் செப்டம்பர், அக்டோபர், நவம்பர் ஆகிய மாதங்களில் பயிற்சி பெற்ற சுமார் 150 யுவதிகளுக்கான இறுதிமாதச் சம்பளம் வழங்கப்படவில்லையாம்.

பல தடவை பனம்பொருள் சபையினரிடம் இதுபற்றி முறைப்பாடு செய்தும் பயன் இல்லை என்று யுவதிகள் கவலையுடன் தெரிவித்தனர்.

இது இவ்வாறிருக்க மேற்படி நிலையம் செப்டம்பர் மாதம் திறக்கப்பட்டு ஒரு தடவைதான் மூன்று மாத பயிற்சி நடைபெற்றது. (கு)

## காரைநகர் மாணவர்கள் 31 பேரின் கல்விச்செலவுகளை நோர்வே குடும்பங்கள் பொறுப்பேற்பு!

(சித்தன்கேணி)

காரைநகர் ஊரிக் கிராமத்தைச்சேர்ந்த 31 மாணவர்களுடைய கல்விச்செலவை நோர்வே நாட்டு 31 குடும்பத்தினர் பொறுப்பேற்றுள்ளனர்.

அண்மையில் நோர்வேயில் இருந்து விஜயம் செய்தமக்கள் குழுவொன்றுகாரைநகரிலுள்ள ஊரி, மடத்துவளவு, தோப்புக்காடு ஆகிய கிராமங்களுக்குச் சென்று மக்களுடைய வாழ்க்கை முறையை கவனித்தனர்.

ஊரிக்கிராமத்தைச் சேர்ந்த 31 மாணவர்களும் கல்வியைத் தொடருவதற்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி ஆகியவற்றுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுடைய விடுதிச் செலவு உட்பட சகல செலவுகளையும் பொறுப்பேற்ற நோர்வே நாட்டு 31 குடும்பத்தினரும் சி-நோர் அபிவிருத்தி நிறுவனத்தின் மூலம் தங்களுடைய உதவிகளை செய்ய இருக்கின்றர்கள். (கு)

## "அவர்கள் விட்டுச்சென்ற பணியைத் தொடர்வோம்"

(அரியாலை)

"சுவிசேஷ ஊழியத்திற்காக இலங்கைக்கு வந்த மிஷனரிமார் இந்நாட்டில் கட்டிய கல்லூரிகளும், வைத்தியசாலைகளும் இந்நாட்டு மக்களின் முன்னேற்றத்துக்கு உதவின. இந்த மிஷனரிமார்கள் வறியவர்களையும், அநாதைகளையும், பின்தங்கியவர்களையும், மற்றவர்களால் கைவிடப்பட்டவர்களையும் போஷித்து வாழ்வழி செய்தார்கள்."

இவ்வாறு நல்லூர் பரி. யாக்கோபு ஆலயத்தில் நடைபெற்ற யாழ்ப்பாணத் திருச்சபை சுவிசேஷ சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் நடைபெற்ற நன்றி தெரிவிக்கும் ஆராதனையில் கோப்பாய் பரிசுத்த மரியாள் ஆலய சேகரக்குரு அருட்திரு ஐசக். செல்வரத்தினம் அடிகளார் அருளுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண அர்ச் டீக்கன் அருட்திரு சாம். டி ஹோர்சிங்டன் அடிகளாரால் ஒப்புக் கொடுக்கப்பட்ட இவ்வாராதனையில் அருட்திரு ஐசக் செல்வரத்தினம் அடிகளார் தொடர்ந்து பேசுகையில்,

"இன்று மேலைத்தேய நாடுகளிலிருந்து மிஷனரி ஊழியத்திற்கென எவரும் வருவது கிடையாது. முன்னைய மிஷனரிமார்களின் ஞாபகமாக அவர்களால் அமைக்கப்பட்ட ஆலயங்களும், வைத்தியசாலைகளும், கல்லூரிகளும் எம்முடனேயே இருக்கின்றன. இவற்றைப் பேணி வருவதுடன் அவர்கள் விட்டுச் சென்ற ஊழியத்தைத் தொடர்ந்து செய்ய வேண்டும்" என்றர். (அ)

# இந்தோனேஷியவிமானப்பயணிகளை கொமாண்டோக்கள் மீட்டனர்

## கடத்தல்காரர் மூவர் கொலை; இருவர் கைது!

பாங்கொக், மார்ச் 31

பாங்கொக் விமானநிலையத்தில் ஐந்து கடத்தல்காரர்களால் 44 பேருடன் பணயம் வைக்கப்பட்டிருந்த இந்தோனேஷிய விமானத்தை இந்தோனேஷிய அரசாங்கம் விசேடமாக அனுப்பிவைத்த கொமாண்டோ பிரிவினர் நேற்று திடீரெனத் தாக்கி அதில் பணயம்வைக்கப்பட்டிருந்தவர்களை மீட்டுள்ளனர்.

இத் தாக்குதலின்போது இந்தோனேஷிய விமானத்தைக் கடத்திய ஐந்துபேரில் மூவர் கொமாண்டோக்களினுல் சுட்டுக்கொல்லப்பட்டனர். இருவர் கைதுசெய்யப்பட்டனர். கொமாண்டோ பிரிவினரின் தாக்குதலின்போது பணயம் வைக்கப்பட்ட 44 பேரில் ஒருவரைத்தவிர ஏனையோர் காப்பாற்றப்பட்டனர். இத் தாக்குதலின்போது 4 வயதுக் குழந்தையொன்று மாத்திரம் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக் குழந்தை தாக்குதலின் போது உயிருடன் இருந்ததாக இச் சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர் தெரிவித்துள்ளார். இத் தாக்குதலின் போது குழந்தை பலியானதென்ற தகவலை பாங்கொக்கிலுள்ள குடிவரவுதிணைக்கள அதிகாரியொருவர் மறுத்துள்ளார்.

பாங்கொக் விமானநிலையத்தில் இந்தோனேஷிய கொமாண்டோக்களின் பணியாட்களை மீட்பதற்கான தாக்குதல் மூன்று நிமிடமே இடம்பெற்றது. கொமாண்டோக்களினுல் கைதுசெய்யப்பட்ட இரு கடத்தல்காரர்களில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இத்தாக்குதலின்போது விமானஓட்டியொருவரும், மீட்புகொமாண்டோ பிரிவைச் சேர்ந்த ஒருவரும் காயமடைந்துள்ளனர்.

ஐம்பது கொமாண்டோக்கள் மிகத்திறமையான, சாதுரியமானமுறையில் தாக்குதலை மேற்கொண்டு பணியாட்களை மீட்டுள்ளனர்.

கடத்தல்காரர்களினுல் விதிக்கப்பட்ட காலக்கெடு முடிவடைய மூன்றரை மணித்தியாலங்கள் இருக்கையிலேயே இந்தோனேஷிய கொமாண்டோக்களினுல் இத் தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கடத்தல்காரர்களினுல் விமானம் பணயம் வைக்கப்பட்டிருந்த தினத்திலிருந்தே பணியாட்களை மீட்பதற்கான இத்திட்டம் இந்தோனேஷிய அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்டதாக பாங்கொக்கிலுள்ள இந்தோனேஷிய தூதுவர் தெரிவித்தார்.

பணியாட்கள் மீட்கப்பட்ட இரு மணித்தியாலத்திற்குள் இந்தோனேஷியாவின் 'டிசி10' விசேடவிமானத்தின் மூலம் ஜகார்த்தா சென்றனர். (வெ)

## மனையியற்கூட திறப்புவிழா

(நெல்லியடி)

புலோலி மெ. மி. தமிழ்க்கலவன்பாடசாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மனையியற் கூடத் திறப்புவிழாவும் கலைவிழாவும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. வடமாநிலக்கல்வியதிபதி திரு. கே. சிவநாதன் பிரதம விருந்தினராகவும், பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வார்கள்.

### மணிவாக்கு

போலிப்பட்டு பல தடவைகளில் அசல் பட்டைவிட அதிகம் பளபளப்பு உடையதாயிருக்கும். அதேவிதத்தில் போலிச்சமயாச்சாரி மெய்ஞானியைவிட அதிகம் பகட்டு உடையவனாயிருப்பதுண்டு.

—அருள் விருந்து

# நமது நோக்கு

## நல்ல முடிவு

விமானக் கடத்தல் நாடகம் நல்ல முடிவு கண்டமை அனைத்துலகையே ஆனந்தக் கண்ணீரில் ஆழ்த்திவிடும் செய்தியாகும்.

வெட்டிக்காரன் புளுகு எட்டுநாளில் தெரியுமென்பார்கள். பாகிஸ்தான் விமானத்தைக் கடத்தியவர்கள் பெற்ற பெருவெற்றி இந்தோனேஷிய சம்பவத்துக்கு உற்சாகமளித்திருந்தது உண்மை.

முந்திய சம்பவத்தில் இடம்பெற்ற பயமுறுத்தல், புதுப் புதுக் கோரிக்கைகள், அரசியல் கைதிகள் விடுதலை இதில் தெளிவாகக் காணப்பட்டன.

கடந்த சம்பவத்தில் பாகிஸ்தான் அரசு பயமுறுத்தலுக்கு நெகிழ்ந்ததை இதில் எதிர்பார்க்க கடத்தல்காரர்களுக்கு காரணம் இருந்தது ஆயினும் இந்தோனேஷியாவின் ராஜதந்திரம் சம்பவத் தொடக்கத்திலிருந்தே மெச்சுதற்குரியதாகக் காணப்பட்டது.

கடத்தல் காரர்களை நேரம் கடத்தி பணயக் கைதிகளைத் தக்கநேரத்தில் தப்பவைப்பதில் வெற்றி [illegible] இந்தோனேஷிய [illegible] நாடுகள் [illegible] தாழ்த்தி அஞ்சலி செலுத்த வேண்டும்.

ஐந்து பேரில் மூன்று பேர் சுடப்பட்டும் இருவர் சிறையிலிடப்பட்டும் விட்டதாகக் கடைசிச் செய்தி உறுதியளிக்கின்றது.

இந்தோனேஷிய விமானம் பிரயாணிகளுக்கு உயிர்ச்சேதமின்றி பாங்கொக்கிலிருந்து நாடு திரும்பிவிட்டதாகவும் கூறப்படுகிறது. ஒரு சிறுபிள்ளையின் கதிபற்றி ஒரு சந்தேகம் கிளப்பப்பட்ட போதும் அது நம்புவதற்கில்லையென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நற்செய்தியின் மிகச் சுவையான அம்சம் எங்கள் நாட்டைப் பொறுத்ததே. கடத்தல் காரர்கள் விமானத்தை இங்கு கொண்டு வரவேண்டுமென்று விடாப்பிடியாக விரும்பும் எங்கள் அரசு அதனைத் திடமாக எதிர்த்ததும் ஒரு பரபரப்பான நிலையை உண்டுபண்ணக் கூடியதாக இருந்தது.

எனவே எல்லாவகையிலும் நாடகம் நன்றாய் முடிந்தது. இந்த நவீன போராட்டம் பேயாட்டமாக முடிவதற்கு ஒருவழி பிறந்திருக்கிறது.

இந்தோனேஷிய அதிரடிப் படையின் ஆண்மையும், ஆட்சியாளரின் அரசியல் தந்திரமும் இந்தப் பயங்கர வாதத்தால் பாதிக்கப்படும் நாடுகளுக்கு ஒருமுன்மாதிரி.

இவ்வித வீரச் செயல் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் எண்டாபே விமான நிலையத்தில் இஸ்ரேலியர் நடத்தியது நினைவு. விமானக் கடத்தலைப் [illegible] விடுதலை [illegible] தாய் நாட்டை [illegible] மீட்கும் பணியில் கையாண்டுவந்தது.

அரசியல், தனிப்பட்ட குரோதம், கொள்ளை, அழிவில் இன்பம் - இவ்வித காரணங்களால் பழக்கத்தில் வரும் இக்கேட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்க உலக நாடுகள் திரளவேண்டும்.

## குறும்புக்கு ஒரு தினம்

சர்வதேச ரீதியிலேயே இன்று ஒரு முக்கிய தினம்; சிறப்பாக ஆங்கிலேயர் இன்று முட்டாள் தினத்தைக் கொண்டாடுகின்றனர். இறைவன் படைத்த அனைவரும் இன்றைக்காவது முட்டாள்கள் என்ற நம்பிக்கைகொண்டவர்கள் ஆங்கிலேயர்.

வாழ்க்கையைச் சீர்கெடுக்கும் கவலைக்கு நகைச்சுவையே நல்ல மருந்து; இன்று அது எங்கும் காணப்படும்

பிரபல தத்துவஞானி பேட்டன் ரஸல் பீக்கிங் நகருக்கு ஒருமுறை விரிவுரைக்காக விஜயம் செய்திருந்தார். கடுஞ்சுகயீனம் கண்டபோது பீக்கிங் பத்திரிகைகளில் தனது மரண அறிவித்தலை வாசித்தாராம். மிஷனரிமாரை இடைவிடாது தாக்கிவந்த அப்பெரியவர் மறைந்தது பற்றி. அவர்கள் அதிகம் கவலைப்படமாட்டார்களென்று ஒரு வரிச்செய்தியில் இருந்ததாம். உண்மையில் அவர் இறக்கவில்லையென்றறிந்ததும் எவ்வளவு ஏமாற்றம் என்று கவலை தெரிவித்தார் ரஸல்பிரபு.

பிரிட்டனில் சாதாரண மனிதன் தொடக்கம், மேதைகள், மாமேதைகள் வரைக்கும் நகைச்சுவையில் நம்பிக்கை உடையவர்களே!

அறிஞர் ஷா, பிரபல பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில், உலகப்பிரசித்திபெற்ற சாளிசாப்லின் உலகைச் சிரிப்பால் உய்யவைக்கும் பெருமைபெற்றவர்கள்!

இங்கிலாந்தின் அறிஞர் ஜீ. கே. செஸ்டர்டன் என்பவர் பருமனானவர். அறிஞர் ஷா மிக மெலிந்தவர், ஒல்லியானவர். செஸ்டர்டன், ஷாவைக் கண்டு, 'உங்களைப் பார்க்க இங்கு பஞ்சம் ஏற்பட்டதாக நினைக்கவேண்டும்' என்றார். அதற்கு உடனே ஷா; 'உங்களைப் பார்த்தால் பஞ்சம் வந்ததற்குக் காரணம் தெரிந்துகொள்வார்கள்" என்றார்.

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் பிரதமர் சேர்ச்சிலை முன்னொரு காலத்தில் மணஞ்செய்ய விரும்பிய பெண்மணி எம். பி. ஒருவர், அந்த ஏமாற்றங்காரணமாக அவரை அடிக்கடி கிண்டல் செய்வதுண்டு. ஒரு கட்டத்தில் ஆத்திரமடைந்த எம்.பி, அவரைப் பார்த்து, 'உங்கள் சிரசியலிலும், உங்கள் மீசையிலும் என்றுமே எனக்கு விருப்பமிருந்ததில்லை' என்றார். அவரை உடனடியாக மண்கவ்வ வேண்டுமென்று நினைத்த பிரதமர் 'அம்மணி, அவ்விரண்டிலும் எதையும் தீண்ட வேண்டிய சந்தர்ப்பம் உமக்கு ஒருபோதும் ஏற்படாது' என்று சத்தியம் செய்தாராம்.

குறும்பு நிறைந்த பேச்சு, செயல் அறிவின் தெளிவை, அனுபவத்தின் முதிர்ச்சியைக் குறிக்கும். வருடத்தில் ஒரு நாளைக்காவது நாமெல்லோருமே முட்டாள்கள் என்ற நினைவு மனச்சுகாதாரத்துக்கு நன்மைபயக்கும்.

### நல்லையில்

# 10 நாள் இசைவிழா இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின் 10 நாள் இசைவிழா இன்று நல்லூரில் ஆரம்பமாகிறது.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று புதன் மாலை இசையரசு எஸ். இரத்தின சபாபதி தலைமையில் ஆரம்பமாகும் இவ்விழாவில் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரையும் மன்றத்தலைவர் சங்கீத பூஷணம் ஏ. எஸ். இராமநாதன் வரவேற்புரையும் நிகழ்த்துவர்.

கௌரவ விருந்தினர்களாகக் கலாரசிகமணி எஸ். செல்வநாயகமும் வைத்திய கலாநிதி ரி. கங்காதரனும் கலந்து கொள்வர்.

யாழ். மாநகரசபை உறுப்பினர் திரு. ஆ. துரைராஜசிங்கம், சங்கீத வித்தியாதரிசி திரு. எஸ். கணபதிப்பிள்ளை, இசையரசு பி. சந்திரசேகரம் ஆகியோர் பாராட்டுரை வழங்குவர்.

### இசை நிகழ்ச்சிகள்

இசை நிகழ்ச்சிகள் விபரம் வருமாறு; பி. ப. 5-00 மங்கல இசை ஈழ நல்லூர் சகோதரர்கள் த. இராஜேஸ்வரன், ந. பரந்தாமன் - நாதஸ்வரம் ந. உதயகுமார், ந. இராசசேகர் - தவில். 6-00மணி; திரு. இ திருஞானசம்பந்தர் - பண்ணிசை. செல்வன் பா. கண்ணன் வயலின், செல்வன் ப. கிருபாகரன் மிருதங்கம். 7-45 மணி; திரு. எஸ் திலகேஸ்வரன் - பாட்டு. திரு. உ. ராதாகிருஷ்ணன் - வயலின், திரு எஸ். மகேந்திரன் - மிருதங்கம்.

### தந்தை செல்வா பிறந்தநாள்:

## நினைவாலயத்தின் முன்பாக நடைபெற்ற பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் 83வது பிறந்தநாள் பிரார்த்தனை, தந்தைசெல்வா நினைவாலயத்தின் முன்பாக நேற்றுமாலை அமைதியாக நடைபெற்றது.

அறவழிப் போராட்டக் குழுவும், தந்தை [illegible] அறங்காவல் குழுவும் இணைந்து நடாத்திய தந்தை செல்வாவின் 83-வது பிறந்தநாள் பிரார்த்தனையை முன்னாள் விரிவுரையாளர் கு. நேசையா ஆரம்பித்து வைத்தார். வண. சர்வானந்தா அடிகள் கிறிஸ்தவ பிரார்த்தனையையும், யாழ். மாநகர சபை உறுப்பினர் ஜனாப் மூசைதீன் பிச்சை இஸ்லாமிய பிரார்த்தனையையும் நடாத்தினார்கள். இந்துசமய தேவாரப் பாடல்களும் ஓதப்பட்டன.

யாழ். மாநகரசபை மேயர்

5-ம் பக்கம் பார்க்க)

## பொதுமக்கள்...

([illegible] தொடர்ச்சி)

கேடாக நடப்பதாகவும், தாங்கள் எல்லோரும் திறப்புவிழாவை பகிஷ்கரிப்பதாகவும், அதனால் சந்தையைத் திறந்து வைப்பதற்கு செல்லவேண்டாமென்றும் பொதுமக்கள் அவரைக் கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து இவ்வைபவத்தை பகிஷ்கரித்து வட்டு. எம். பி திரும்பிச்சென்றார்.

இத்திறப்புவிழாவில் பொதுமக்கள் கலந்துகொள்ளவில்லை. சங்கானைப்பட்டினசபைஊழியர்கள் மட்டுமே கலந்துகொண்டனர்.

# மக்கள் கருத்து

## நம்பிக்கை வளர்க்கவும்

பருத்தித்துறையிலுள்ள தும்பளை முருகையன் கோவிலடியில் நடைபெற்ற கிராமயாத்திரைக் கருத்தரங்கின் போது, பருத்தித்துறை நகரசபை நிர்வாகக் குறைபாடுகள் தொடர்பாக தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகள்பற்றி விசாரணை நடத்த எதிர்க்கட்சித் தலைவர் உறுதியளித்துள்ளமை மகிழ்ச்சிதரும் செய்தியாகும்.

எந்தவொரு காரியத்தைச் செய்வதற்கும் அப்பகுதி மக்கள் பட்டுவரும் கஷ்டமே இதற்குக் காரணமாகும். குறிப்பாக மின்சாரப்பகுதியால் மக்கள் படும் துன்பம் சொல்லுந்தரமன்று. இதற்கெல்லாம் காரணம் என்னவென்று புரியாமலே மக்கள் விழிக்கிறார்கள்.

வெறுமனே கருத்தரங்கில் மட்டும் சொல்லிவிட்டுவிடுவதோடு அல்லாமல் உடனடியாகவே விசாரணைகளை மேற்கொண்டு கூட்டணிமீது இன்னும் மக்களுக்கு உள்ள நம்பிக்கையை வளர்க்கவேண்டும்.

—யோசேப் அன்ரனி

தும்பளை,
பருத்தித்துறை.

## மனநோயாளியா?

வாஷிங்டன், மார்ச் 31

அமெரிக்க அதிபரைப் படுகொலைசெய்ய முயற்சித்த ஜோன் கிங்ஸ்லி அண்மையில் மனநோய்க்காகச் சிகிச்சை பெற்றார் என்று அவரின் பெற்றோர் தெரிவித்தனர்.

கிங்ஸ்லி முன்பு ஒரு குற்றமும் செய்யவில்லை என்றும் கடந்த அக்டோபரில் முன்னாள் அமெரிக்க அதிபர் திரு ஜிம்மி கார்ட்டர் டிறஸி பகுதிக்கு விஜயம்செய்தபோது இவரைப் பொலிசார் 3 துப்பாக்கிகளுடன் கைதுசெய்து விடுதலை செய்யப்பட்டார்என்று பொலிசார் தெரிவித்தனர்.

கொலருடோவைச் சேர்ந்த வெகிறீன் பகுதியில் வாழும் கிங்ஸ்லிக்கு எதிராக பொலிசார் வழக்குத்தாக்கல் செய்துள்ளனர். (இ)

# நாடும் நடப்பும்....

இன்று ஏப்ரல் முதல் தேதி! முட்டாள் தினம்!

இன்று சிறுவர்கள் மட்டுமல்ல பெரியவர்களும் கூடக் கரடிவிடுவார்கள்.

ஏமாந்துவிடாமல் எச்சரிக்கையாயிருங்கள்!

0 0 0

பாணின் கட்டுப்பாட்டு விலையை நீக்கவேண்டும் என்றும் இவ்வாறு நீக்குவதன் மூலம் பாணை இப்போதுள்ளதைவிட சுமார் பத்துச் சதமாவது குறைத்து விற்பனை செய்ய முடியும் என்றும் பாண் தயாரிக்கும் வேலையைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செய்யலாமென்றும் கொழும்பு மாவட்ட அமைச்சர் திரு. வீரசிங்க மல்லிமாராச்சி அரசுக்கு ஆலோசனை கூறியிருக்கிறாராம்.

நல்ல யோசனைதான். எவர் பாண் தயாரித்தாலும். எவர் என்ன ஆலோசனை கூறினாலும் சரி, பொதுமக்களைப் பொறுத்தவரையில் பாணின் விலை குறைந்தால் சந்தோஷமே!

தமிழ்நாடு சென்னை ராஜ்யமாக இருந்தபோது இந்தியாவின் கவர்னர் ஜெனரல் பதவி வகித்து ஓய்வு பெற்றபின் சென்னையின் முதலமைச்சராகப் பதவியேற்ற மூதறிஞர் ராஜாஜி அரிசிக்கும் மற்றும் பொருள்களுக்கும் இருந்துவந்த பங்கீட்டு முறையை நீக்கினார். பங்கீட்டு முறை நீக்கப்பட்டதும் அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்கு இருந்துவந்த தட்டுப்பாடு நீங்கியதுடன் விலையும் வெகுவாகக் குறைந்தது.

ஆனாலும் கொள்ளை இலாபத்தையே குறிக்கோளாகக் கொண்ட வர்த்தகர்கள் எங்கிருந்தாலும் பொருள்களுக்குச் செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, தமது பணப்பையை நிரப்புவதில் சமர்த்தர்கள்!

0 0 0

சில தினங்களுக்கு முன்னர் விபத்தில் சிக்கிய ஒருவரை உறவினர்கள் யாழ் பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார்களாம். வெளிக்காயம் பெரிதாக இல்லாதிருந்தபோதிலும் உள்காயம்பற்றி அவர்கள் கவலைகொண்டிருந்தனர் அன்றையதினம் ஆஸ்பத்திரியிலிருந்த ஊழியர் எவரும் [illegible] நோயாளிபற்றிக் கவனம் செலுத்தவில்லையாம். அன்று ஆஸ்பத்திரி ஊழியர்களுக்குச் சம்பள நாள்.

பலரிடமும் சென்று உறவினர்கள் முறையிட்டபோது முப்பது நாள் வேலை செய்தபின். இன்றுதான் சம்பளத்துக்கு நிற்கிறோம்; நீங்கள் நோயாளியைக் கொண்டுவந்த முப்பது நிமிடங்களுக்குள்ளேயே அவதிப்படுகிறீர்களே என்று கேட்டனராம்!

அந்த நோயாளி சில தினங்களில் மரணமானார்.

இத்தகவலைத் தெரிவித்த ஒரு அன்பர் ஆஸ்பத்திரிகளில் வேலை செய்பவர்களுக்குச் சேவைமனப்பான்மை இல்லாவிட்டாலும் மனிதாபிமானமா

(5-ம் பக்கம் பார்க்க

இப்பொழுது எங்களிடம் கிடைக்கின்றது

நியூஸ்பிரின்ட் பேப்பர்

இம்போர்ட்டெட் வைட் பேங்பேப்பர் JAPAN)
இம்போர்ட்டெட் வைட் பேங்பேப்பர் (CHINA)
வைட் பேங் பேப்பர் உள்ளூர் (N. P. C.)
வைட் பிரின்டிங்பேப்பர் (28 இறா., 33 1/2 இறா D/C)
டுப்பிளிகேடிங் பேப்பர்
கோடிட்ட கடதாசி
பொக்ஸ் போர்ட், சிப் போர்ட், வெள்ளை சரி (TISSUE), கலர் ரிசு (TISSUE), பிரின்டிங் மை வகைகள் (இறக்குமதி. உள்ளூர் வகைகள்), மின்சார உபகரணங்கள் மற்றும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ள

அம்பலவாணர் அன் சன்ஸ்

196, கே. கே எஸ். ரோட் ... யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8291, தந்தி: வாணர்சன்ஸ்.

JAFFNA

# யாழ் சாரணன்

ஈழநாடு - யாழ் மாவட்ட சாரணர் சங்க இணை வெளியீடு

தொகுப்பு நா. நல்லையா, தலைவர் பயிற்றுநர் பயிற்சி. இ. தவகோபால், தகுதிகாண் பயிற்சி.

## சகல சாரணத் தலைவர்களும் பயிற்சி பெறுவது அவசியம்

மிக விரைவில் சிரேஷ்ட சாரணர் பிரிவுக்குப் பதிலாக திரி சாரணர் பிரிவின் வயதெல்லை குறைக்கப்பட்டு பாடசாலை சாரணர் குழு மட்டத்தில் திரி சாரணியம் புகுத்தப்படவிருப்பது சகலரும் அறிந்ததே. திரி சாரணர் பிரிவின் ஆரம்ப வயது 16 ஆக மாற்றப்படவிருக்கின்றது. முன்னர் சாரணத் தலைவர்கள் பயிற்சியில் சாரணர்கள், சிரேஷ்ட சாரணர்கள் பிரிவுக்கான தேவைகள் பூர்த்தியாக்கப்பட்டன. மாற்றமடைய இருக்கும் பாடத்திட்டப்படி திரிசாரணர் பிரிவு சகல கல்லூரி மட்டங்களிலும் இயங்கும். இவற்றைத் திறம்பட இயக்குவதற்கு புதிய இருவரை திரி சாரணத் தலைவர்கள் பயிற்சிக்கு அனுப்புதல் வேண்டும். அல்லாவிடின் ஏற்கனவே சாரணத் தலைவர்கள் பயிற்சி பெற்றவர்கள் திரிசாரணத் தலைவர்கள் பயிற்சியையும் பெற்று இப்பிரிவை இயக்க வேண்டும்.

நாட்டின் தேவையையும், இயக்கத்தின் வளர்ச்சியையும் முன்னிட்டே இந்நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஆகவே இயங்கும் சகல சாரணக் குழுக்களிலிருந்தும் புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும் குழுக்களிலிருந்தும் தலைவர்களை திரி சாரணத் தலைவர்கள் பயிற்சிக்கு அனுப்புங்கள். மிக விரைவில் திரி சாரணத் தலைவர்களுக்கான ஆதாரப் பயிற்சி அவத்தை 2 வடபிரதேசத்தில் நடைபெறவிருக்கிறது.

# 1981 - திரிசாரணர் ஆண்டு



'குருளையர் ஆண்டு, சாரணர் ஆண்டு என்று அவ்வப் பிரிவுகளின் முன்னேற்றத்திற்கும் விருத்திக்குமாக பிரகடனப்படுத்தப்பட்டது போல் இவ்வாண்டு 1981 திரிசாரணர் ஆண்டாக தேசிய தலைமைக் காரியாலயம் பிரகடனப் படுத்தியுள்ளதாக சென்ற வாரம் யாழ் நகரில் தங்கியிருந்த தேசிய பயிற்சி ஆணையாளர் திரு. பி. எஸ். ஆர். இராஜமணி குறிப்பிட்டுள்ளார். தான் இப்பிரிவில் மிகவும் அக்கறையுடையவராக இருந்தும் தான் தேசியபயிற்சி ஆணையாளராகியதும், இப் பிரிவின் வளர்ச்சி குன்றியது மிகவும் கவலைக்கிடமானது என்றும், எமது நாட்டுக்குத் மிகவும் அத்தியாவசியமாகத் தேவையான பிரிவு திரிசாரணர் பிரிவே என்றும், இது கட்டாயமாக விருத்தியாக்கப் படவேண்டும் என்றும் இதற்கான பயிற்சிகளை மிகவிரைவில் நடத்தவேண்டும் என்றும் திரி சாரணத் தலைவர்கள் - ஆதாரப்பயிற்சி பயிற்றுனர்கள் கருத்தரங்கில் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது 18 - 24 வயதினருக்காக இருக்கும் இப்பிரிவு இப்பிரிவின் தேவையையும் முக்கியத்துவத்தையும் கருதிற்கொண்டு பாடசாலையில் உள்ள சாரணர்களும் பங்குகொள்ளக்கூடிய வகையில் மிகவிரைவில் வயதெல்லை குறைக்கப்படவுள்ளது. நான் இப்பிரிவில் யாழ் மாவட்ட திரிசாரணத் தலைவராக பணிபுரிந்ததன் காரணமாக எமது மாவட்ட திரிசாரணர் பிரிவுகளை நன்கறிவேன். எமது வளர்ச்சி முன்னேற்றம் ஆரம்ப நிலையில் தான் இருக்கின்றது: ஆகவே நாம் இப்பிரிவின் வளர்ச்சியில் அக்கறையுடையவர்களாக இருக்கவேண்டிய அவசியம் வந்துள்ளது. தேசியப்பயிற்சி ஆணையாளர் பொதுவாக தீவு அடங்கிலும் இதன் வளர்ச்சியில் மந்தகதி காணப்படுவதாகக் கூறினார்கள். இப் பிரிவின் அவசியத்தினால் 16 வயதுடைய சிறுவர்களுக்கும் இது விரிவுபடுத்தப்படவிருக்கின்றது.

**இ. தவகோபால்**
(உதவி மாவட்ட ஆணையாளர் - நிர்வாகம்)

இச் சந்தர்ப்பத்தில் இப் பிரிவுக்கான பிரதான நோக்கங்கள் என்ன என்று அறிவது சாலச்சிறந்ததாகும். இயக்கத்தின் ஸ்தாபகர் பேடன்பவல் அவர்கள் "திரிசாரணியம் என்பது திறந்தவெளி சகோதரத்துவமும் சேவையுமாகும்'' என்று குறிப்பிட்டுள்ளார்கள். இப் பிரிவு சாரணப்பயிற்சியின் ஓர் தொடர்ச்சியாகும். இது சாரணியப் பயிற்சியின் தொடர்ச்சிமாத்திரமல்லாது சாரணியப்பயிற்சியின் முடிவும் இப்பிரிவில்தான் உள்ளது. ஆகவே இது ஒருவனை பூரண மனிதனாக்கி தனக்கும் தனது சமூகத்திற்கும் உபயோகமுள்ள ஓர் சிறந்த பிரஜையாக ஆக்குகின்றது. இது தனிப்பட்ட நபரில் காணப்படும் குறைபாடுகளை கண்டு கொள்ள உதவி அவற்றை நிவர்த்திக்கும் வழிவகைகளை கொடுக்க உதவுகின்றது. ஒருவனை நிறைந்தவர்களோடு நல்லவனாக வாழவழிவகுக்கின்றது. இப் பிரிவு சிறுவயதில் சாரணிய தத்துவங்களை அறிய முடியாத வாலிபர்களுக்கும் இத் தத்துவங்களை அறிய சந்தர்ப்பத்தை அளிக்கின்றது. வாலிபப்பருவத்தில் சாரணிய உயர்ந்த இலட்சியங்களுக்கிணங்கவும், சாரணிய தத்துவங்களுக்கமைவும் வாழ வழி வகுக்கின்றது.

இயக்கத்திற்கும் இயக்கத்திற்கு வெளியேயும் சேவை செய்யவும் தான் வாழும் சமூகத்திற்கு எல்லா வழிகளிலும் சேவையாற்றவும் பயிற்றுவிப்பதுடன் சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்திக்கொடுக்கின்றது.

இத்தகைய உயர்ந்த தத்துவங்களையுடைய இப்பிரிவில் இந்நாட்டில் வாழும் ஒவ்வொரு வாலிபனும் அவன் கல்லூரியில் இருந்தால்என்ன? எத்தகைய தொழில்புரிந்தால் என்ன? அங்கத்தவனாக சேர்ந்து தானும் தனது சமூகமும் நன்மையடையச்செய்ய வேண்டியது தலையாய கடமையாகும்.



சாரணர் கிளைச் சங்கம் கிளிநொச்சி மாவட்டம் சாரணத் தலைவர்களுக்கான அறிமுகப்பயிற்சி பெப்ரவரி மாதம் 27-ம், 28-ம் திகதிகளில் யாழ். சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெற்றது. பயிற்சித் தலைவராக திரு. ஈ. எஸ். அரசரத்தினம் உதவித்தலைவர் பயிற்றுனர்) கடமையாற்றினார்கள். இப்பயிற்சியில் 37 சாரணத் தலைவர்கள் பங்கு கொண்டனர். மேலே உள்ள படத்தில் மேற்படி பயிற்சியை திரு. ஏ. எஸ். பாலரத்தினம் (உதவி அதிபர் டிறிபேர்க் கல்லூரி சாவகச்சேரி) மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைக் காணலாம்.

# மாவட்டச் செய்திகள்

### ஊர்காவற்றுறை

கரம்பொன் சண்முகநாத மகாவித்தியாலய சாரணர் குழுவிலிருந்து 10 சாரணர்களும் 4 சாரண ஆசிரியர்களும் சைக்கிள் சுற்றுலாவை மேற்கொண்டு யாழ். குடாநாட்டின் முக்கிய இடங்களைப் பார்வையிடுவார்கள். 1-4-81 புதன்கிழமை மகாவித்தியாலயத்திலிருந்து புறப்பட்டு காரைநகர் வழியாக காங்கேசன்துறை சீமெந்துத்தொழிற்சாலை, கீரிமலை, மாவிட்டபுரம், பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலையில் இரவு தங்கி மறுநாள் 2-4-81 தோலகட்டி, அச்சுவேலி, நிலாவரை திருநெல்வேலி, நல்லூர் மில்க்வைற் தொழிலகம், நூதனசாலை, ஈழநாடு நிறுவனம் ஆகிய இடங்களைப் பார்வையிட்டு திரும்புவார்கள்.

நல்லூர். யாழ்ப்பாண உப மாவட்டங்கள் சாரணத் தலைவர்கள் அறிமுகப்பயிற்சி அவத்தை சென்ற 21, 22-ம் திகதிகளில் யாழ். மாவட்ட சாரணர் செயலகத்தில் திருமதி R. H. செல்வராஜா(உ. த. ப) அவர்களைபயிற்சித் தலைவராகக் கொண்டு வெகு சிறப்பாக நடைபெற்றது. பயிற்சியின் போது பயிலுனர்கள் சிரமதானம் மூலம் தலைமைச் செயலகத்தை துப்பரவாக்கி மாவட்ட ஆணையாளரின் பாராட்டுக்களைப் பெற்றனர்.

### மாவட்ட ரீதியில் சிரமதானம்

எதிர்வரும் 28-ந் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் மாவட்ட செயலகத்திலும் பழைய பூங்காவிலும் நடைபெறவிருக்கும் சிரமதானத்தில் பங்கு கொள்ளுமாறு சகல குருளைச் சாரண, சாரண குழுக்களுக்கும் மாவட்ட சாரண ஆணையாளர் திரு. சி. கந்தமூர்த்தி அழைப்பு அனுப்பியுள்ளார். இச்சிரமதானம் அரசாங்க அதிபரினாலும், மாவட்ட சாரண ஆணையாளரினாலும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

20-3-81 வெள்ளிக்கிழமை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அவற்றுள் சாரணர் குழு அங்குரார்ப்பணம் முக்கிய இடம் வகித்தது. திரு. நா செல்லையா உ. மா. ஆ (பயிற்சி) கருத்தரங்கில் பங்குகொண்டு சாரணர் குழுவை ஆரம்பித்து வைத்தார்கள். முதல் முயற்சியாக இரண்டு அங்கத்தவர்களை 21, 22 ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கும் சாரணத்தலைவர்கள் பயிற்சிக்கு அனுப்பி வைத்திருந்தனர். அத்துடன் இந்நிலையத்தின் செயலாளர் திரு. குணராஜாவும் தலைவர்கள் பயிற்சியின் பொதுப்பாடங்களில் பங்கு கொண்டார்கள். இம்முயற்சிக்கு இந்நிலையத்தின் உபதலைவரும் சமூகசேவையாளருமான திரு. சண்முகமும் நிலையத்தின் தலைவருமான திரு. சபாரத்தினமும் உறுதுணையாக விருந்தனர்.

திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலை ஸ்தாபகர் தினத்தை சாரணர்களும் வழிகாட்டிகளும் சேர்ந்து 18-3-81 இல் வெகு சிறப்பாகக் கொண்டாடினர். இவ்விழாவிற்கு திரு. நா. நல்லையா உ. மா. ஆ. பயிற்சி பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக திரு. இ. தவகோபால் (உ.மா. ஆ. நிர்வாகம்) திரு. சு. ஏகாம்பரநாதன் (மா தி. சாத) திரு என். சிவயோகராசா ஆகியோர் கலந்து கொண்டனர். கல்லூரி அதிபர் திரு. எஸ். முத்துலிங்கம் தலைமைதாங்கினர்.

## சூடுபட்ட

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மூன்று மாதங்கள் செல்லுமென்று ஆஸ்பத்திரி அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். நீனின் உத்தியோகபூர்வ அலுவல்களை அமெரிக்க உபஜனாதிபதி திரு. ஜோர்ஜ் புஷ் வெள்ளை மாளிகையில் கவனித்து வருகிறார்.

இதேசமயம், கொலைமுயற்சியின் போது படுகாயமுற்ற பத்திரிகையாள திரு. ஜேம்ஸ் பிரெய்லி உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார் என்றும் அவரது மூளையில் பாய்ந்த துப்பாக்கிரவை 5 மணி நேர சத்திரசிகிச்சையின்பின் வெளியே எடுக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது (இ)

## நினைவாலயத்தின்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இராஜா விசுவநாதன் மாநகர சபை உறுப்பினர்கள் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டு தந்தையின் நினைவாலயத்துக்கு மலர்கள் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள். (இத். நி.)

## நாடும் நடப்பும்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வது இருக்கவேண்டாமா என்று கேட்டார்.

இங்குள்ளவர்களைத் தெவிணிலங்கைப்பகுதிக்கு மாற்றிவிட்டால் பயத்தினாலாவது சேவை மனப்பான்மையும் மனிதாபிமானமும் வந்துவிடும் என்றார் அந்த அன்பர்!

யாழ். நகரின் சில வீதிகளில் மாநகரசபையின் மின்சாரப் பகுதியினர் வெகு அக்கறையுடன் மின்வெளிச்சம் கிடைப்பதற்காக அடிக்கடி மின்கம்பங்கள், கம்பிகளைச் சீர்பார்த்து வந்தாலும் சில வீதிகளிலிருக்கும் சிலருக்கு இந்த வெளிச்சம் பிடிப்பதில்லை; எப்படியோ மின்வெளிச்சம் தடைப்பட்டு அந்தப் பகுதியை இருளில் ஆழ்த்திவிடுவதில் அவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறார்கள்!

ஊர்சுற்றி

# "முதலாம் எதிரி துவக்கு வைத்திருந்தார்; குறிபார்த்துச் சுட்டதைக் காணவில்லை"

## இரட்டைக் கொலை வழக்கில் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

'எதிரிகள் எவரும் ஆயுதங்களைப் பாவித்ததைக் காணவில்லை. 1-ம் எதிரி துவக்கு வைத்திருந்தார். குறிபார்த்துச் சுட்டதைக் காணவில்லை. வெடிச்சத்தம் கேட்டது. திரும்பிப்பார்த்ததும் 1-ம் எதிரி துவக்குவைத்திருந்தார்.'

மாரிசன்கூடல் இரட்டைக் கொலைவழக்கில் குறுக்குவிசாரணையின்போது சாட்சியமளித்த தம்பு குணம் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி, ஜனுப் எம். ஜாமில் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் மாரிசன்கூடலில் 78 ஆகஸ்ட் 13-ம் திகதி மூ. சுவாமிநாதன், சு. மன்மதராசா ஆகியோரைக் கொலை செய்ததாகவும், எஸ். கதிர்காமநாதன், எஸ். தங்கராசா ஆகியோரைக் கொலைசெய்ய முயற்சித்ததாகவும், என். செல்லத்துரை, வை. சின்னப்பு, து. இராசரத்தினம், து. தங்கராசா, வே. மார்க்கண்டு, வை. சின்னையோன், வே. சங்கரன், வே இராசையா, ம. அந்தோனிப்பிள்ளை, அ. கைதான்பிள்ளை ஆகியோர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். பி. தம்பிரத்தினம் குறுக்குவிசாரணை செய்தபோது தம்புகுணம் கூறியதாவது:-

'துவக்கு வைத்திருந்ததைக் கண்டேன். பாவித்ததைக் காணவில்லை. வாள் வைத்திருந்ததையும் கண்டேன் வாள் பாவித்ததைக் காணவில்லை.'

சட்: மாதத்தில் எத்தனை நாள் நீர் மல்லாகம் கோட்டிற்குச் செல்வீர்?-அடிக்கடி செல்வேன்.

சட்: நீதிமன்றத்தில் உமக்கு எதிராக எத்தனை வழக்கு இருக்கிறது?-1 வழக்கில்தான் எதிரி. மற்ற எட்டு வழக்குகளிலும், நான் வழக்காளி.

சட்: முடிந்த வழக்குகள் எத்தனை?-2 வழக்கு.

சட்: என்ன வழக்கு?-அடிபட்ட வழக்கு.

சட்: எதிரிகள் ஆயுதங்களைப் பாவிக்கவில்லை?-இல்லை. துவக்கு வெடிச்சத்தத்தைக் கண்டேன்.

நீதிபதி: சத்தத்தை எப்படிக் கண்டீர்?-சத்தைக் கேட்டேன் காணவில்லை.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. (ஏ)

## வருடாந்த மகாநாடு

(பண்டாரவளை)

அகில இலங்கை அரசினர் பாடசாலை கல்வி நிறுவனங்களின் ஊழியர் சங்கத்தின் 20-வது வருடாந்த மகாநாடும் பொதுக் கூட்டமும் ஏப்ரல் மாதம் 24-ம் திகதி நடைபெறுகிறது. (சித் நி)

## இன்று

## யாழ். மாவட்ட அமைச்சருடன் பேச்சுவார்த்தை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் இன்று பிற்பகல் கடந்த ஆண்டு ஜூலை மாதம் வேலையிழந்த பாதிப்புற்றோர் சங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்துகின்றார். இப்பேச்சுவார்த்தை யாழ். அரசாங்கச் செயலகத்தில் இடம்பெறும்.

இச்சங்கத்தினர் தங்களுடைய நிலைபற்றி யாழ். மாவட்ட அமைச்சருக்குப் படிதம் எழுதியதைத் தொடர்ந்து மாவட்ட அமைச்சர் பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ளார். (சித். நி)


# உத்தரவாதச் சீட்டில்லாமலும் ஒரு சிற்றிசன் கைக்கடிகாரமா?

அது போலியாக இருக்கலாம்.






எமது குளிரூட்டப்பட்ட வேலைத்தலத்தில் தொழில் நுட்பவியலாளர்களை வெளிநாட்டு நிபுணர்கள் மேற்பார்வை செய்கிறார்கள்.

வாங்கும்பொழுது அதன் உயர்ந்த தரத்திற்கும் உன்னத வேலைப்பாட்டிற்கும் சான்று தரும்படி வலியுறுத்திக் கேளுங்கள். ஒவ்வொரு அசல் சிற்றிசன் கைக்கடிகாரத்துடனும் வழங்கப்படும் உத்தரவாதச் சீட்டு ஒரு வருட கால இலவச பராமரிப்பு சேவையைப் பெறும் உரிமையை உங்களுக்கு அளிக்கிறது. அத்துடன், எமது அதி சிறப்பான வேலைத் தலங்களில் அதி நவீன உபகரணங்களின் உதவியுடன் திருத்த வேலைகளைச் செய்து கொள்ளும் உரிமையும் கிடைக்கிறது. எமது தொழில் நுட்பவியலாளர்களை உற்பத்தியாளர்களே பயிற்றுவிக்கிறார்கள்







விலைகள் ரூ 600/- இலிருந்து.

சிற்றிசன்

மகாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட்
54, பாங்க்ஷால் வீதி கொழும்பு.

**வெலிங்டன்**
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—மஞ்சுளா
**மன்னவன் வந்தானடி**

**லிடோ**
(யாழ்நகர்)
Daily 10-30, 2-15, 4-45, 7-15 & 9-45
JON VOIGST. FAYE DUNAWAY in
**THE CHAMP**

பார்த்துவிட்டீர்களா? பறவைகள் பறந்து விடப்போகின்றன! திசைமாறிய பறவைகள் கடைசி வாரம்!
**சாந்தி** (யாழ்நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
**திசைமாறிய பறவைகள்**
— மகளிர்க்கு மிக ஏற்ற சித்திரம் —

**மனோகரா** தினசரி 4 காட்சிகள் (யாழ்ப்பாணம்)
★ சிவாஜி ★ ஸ்ரீதேவி ★ பிரமிளா
★ சுந்தரராஜன் ★ விஜயகுமார்
★ ரவிச்சந்திரன் மற்றும் பலர் நடித்த
'தீப்பொறி' பறக்கும் வண்ணப்படம்
**கவரிமான்**

**ராணி** (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00, 9-30
3-வது ஜுவாலை வீசும் வாரமாக,
★ ரஜனி-காந்த் ★ ஷோபா
★ ஸ்ரீபிரியா ★ சுமன்
★ சௌகார் ஜானகி நடித்த
**தீ**
இலங்கை—இந்திய தயாரிப்பு

**ராஜா** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி - ஜெயலலிதா நடித்த
**அரச கட்டளை**
(புதிய பிரதி)

3-4-81 முதல் பாக்கியராஜா - ரதி
**புதிய வார்ப்புகள்**
(ஈஸ்ட்மன் கலர்)
டைரக்ஷன்:
"நிறம் மாறாத பூக்கள்" புகழ் பாரதிராஜா

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, பி.ப.2-00, மாலை 4-30, 7-00, 9-30
CHARLES BRONSON JAMES COBURN
**THE STREET FIGHTER**
Co-Starring-Jill Ireland Strother Martin
The Times were hard, The Streets were tough
...but Bronson was tougher
An hard-hitting motion-Picture
Color-Panavision

**ஸ்ரீதர்**
(யாழ்ப்பாணம்)
காட்சிகள் முன்கூட்டியே ஆரம்பமாவதால் காட்சி நேரம் குறிப்பிட முடியாமைக்கு மன்னிக்கவும்.
★ சிவாஜி ★ ஜெய்கணேஷ் ★ ஸ்ரீதேவி
★ ஜெயசுதா ★ சுந்தரராஜன் ★ சௌகார்ஜானகி
நடித்த
**பட்டாக்கத்தி பைரவன்**
(வண்ணப்படம்)



## தவக்கால நற்சிந்தனை

### தலைமைச் சங்கம் முன் இயேசு

மாற்கு 14:55

தலைமைச் சங்கம் முன்னிலையில் இயேசு நிறுத்தப்படுகிறார். அவர்மேல் இல்லாத பொல்லாத குற்றங்கள் சாட்டப்படுகின்றன. மக்கள் எல்லாரும் ஆதரிக்கக் கூடிய விதத்தில் தாங்கள் போற்றிக் காப்பாற்றி வந்த ஆலயத்தை இடித்து விடுங்கள் என்று சொன்னார் என்றும் உரோமை அரசாட்சியையும் உரோமை அரசின் அதிகாரிகளையும் தம் வசப்படுத்த செசாருக்கு வரி கொடுக்க வேண்டாம் என்று இயேசு கூறியதாகவும் குற்றங்கள் சாட்டப்பட்டன.

ஆனால் இயேசுவோ இத்தனை குற்றச்சாட்டுக்களுக்கும் பதில் கூறவில்லை. ஏனெனில் இவர்கள் தன்மீது கொண்டிருக்கும் பொறாமையினால் இவ்வாறு தம்மைக் கையளித்தனர் என்று அறிவார்.

ஆம் எம்வாழ்விலும் இதே போன்ற நிலைகள் ஏற்படுவது இல்லையா? பிறர் மீது கொண்டிருக்கும் பொறாமையினால் வீண்குற்றங்களை அவர்கள் மீது சுமத்துவது இல்லையா?? எங்களுக்கு வேண்டாத ஒருவரை அநீதமான முறையில் போலிக்குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருத்துவதில்லையா..... இவைஎல்லாம் கிறிஸ்தவமா? ஒருவன் ஒருகுற்றத்தை புரிந்தால் அதைப் பெரிதுபடுத்தி அவன் மீண்டும் மனந்திருந்தி வாழவிடாது அவனை ஒதுக்கி விடுவதில்லையா? — பதில் என்ன?

— அருட்திரு மேரி பஸ்ரியன்

## உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் சரஸ்வதி சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் நடாத்தும் பரராசசிங்கம் ஞாபகார்த்த 3 வது உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் முதல் நாளான இன்று அச்சுவேலி நவோதயா விளையாட்டுக் கழகமும் டயமன் விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன.

வீனஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் இப்போட்டிக்கு திரு. வ. திருஞானசம்பந்தர் மத்தியஸ்தராகக் கடமையாற்றுவார். (ச-அ)

**நாகம்ஸ்** (கன்னாகம்)
தினசரி 6-30, 9-30
**The Golden Voyage of SINBAD**

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-15, 9-30,
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி—சுஜாதா
**தீபம்**
(புதிய பிரதி-ஈஸ்மன் கலர்)

**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
மகத்தான 2-வது மாதம்
ரஜனிகாந்த்—ஷோபா
நடித்த
**முள்ளும் மலரும்**
போன்:331 (கலர்)

கட்டுவன் ம. வி.

## முன்னேற்றம் குறித்து உ. தே. ஆணையாளர்பாராட்டு

(மல்லாகம்)

'பல்வேறு வசதியீனங்கள், குறைபாடுகள் இருந்தும் இப்பாடசாலை கல்வி, விளையாட்டுத்துறைகளில் முன்னேற்றம் அடைந்துள்ளது பாராட்டுக்குரியதாகும். பட்டணப்பகுதியில் அமைந்திருக்கும் பெரிய கல்லூரிகளுக்கு கிராமத்திலுள்ள இம்மகாவித்தியாலயம் சளைத்ததல்ல என்பதற்கு இவ்விளையாட்டுப் போட்டியே ஓர் எடுத்துக்காட்டாக இருக்கிறது.'

தெல்லிப்பழை கட்டுவன் புலம் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் வெற்றிபெற்றோருக்கான பரிசளிப்பு விழாவில் யாழ் உதவித் தேர்தல் ஆணையாளர் திரு. அ. ஜெயரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறிப்பிட்டார்.

மேற்படி மகாவித்தியாலய அதிபர் திரு. சீ. சிவநாதபிள்ளை தலைமையில் நடைபெற்ற இப்பரிசளிப்பு விழாவில் திருமதி லோ. ஜெயரத்தினம், வெற்றியீட்டியோர்க்கு பரிசில்கள் வழங்கினார். போட்டி அமைப்பாளர் ஆசிரியர் இ. இராசேந்திரம் நன்றி தெரிவித்துப் பேசினார்.

நீலம், சிவப்பு, பச்சை இல்லங்கள் முறையே 1-ம், 2-ம், 3-ம் இடங்களைப்பெற்றன. (ஈ)

## இன்றைய பலன்

பங்குனிமாதம் 19-ம் திகதி
புதன்கிழமை
(1-4-81)

மேடம்; வீட்டில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் நடைபெறும் விருந்துபசாரங்களும் உண்டு சிலருக்கு வாகன லாபங்களும் கிடைக்கலாம் மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றமுண்டு.

இடபம்; இன்று எதிலும் நிச்சயமற்ற நிலை தென்படும் மனதில் விரக்தி மனப்பான்மை தென்படும். உணர்ச்சி வசப்படுவதால் வேண்டாத விளைவுகள் உருவாகும் மனஅடக்கம் நன்று.

மிதுனம்; இன்னலின் பின்னல் உங்கள் முன்னேற்றத்தைத் தடுக்கும் இதயபாரம் வேதனைப்படுத்தும் திடசித்தம் இருப்பின் எதையும் சமாளிக்கலாம்.

கடகம்! அதிகாரப் பெருக்கும் அதிக பொருள் வரவுக்கும் இடமுண்டு. ஆக்கப்பணிகளில் ஈடுபடுவீர்கள். குடும்பத்திலும் மகிழ்ச்சி நிலவும் மேலிடத்திலிருந்து திருப்திகரமான செய்தி கிடைக்கும்.

சிங்கம்: எதிலும் அவசரப் போக்கைக் கடைப்பிடிப்பீர்கள் தரக்குறைவான தகவல்கள். கிடைக்கக்கூடும். பெரியவர் ஒருவருடன் கருத்து வேற்றுமை தோன்றலாம் அடக்கம் வேண்டும்.

கன்னி: நீண்ட பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம். தாய் வழிமூலம் பொருள் வரவுக்கு இடமுண்டு. விவசாயிகள் விளை பொருள் விருத்தியை விளைவிக்கின்றது. வேலைத்தளத்திலும் உயர்வுண்டு.

துலாம்; சூதாட்டத்தின் மூலம் பெருந்தொகையை இழக்க நேரிடலாம் நண்பர்களுடன் பகைத்துக் கொள்வீர்கள் மதுபானத்தைத் தவிர்த்து மனக்கட்டுப்பாட்டுடன் இருக்கவும்.

விருச்சிகம்: தூரத்துப் பயணம் துயரம் தரலாம் வருமானத்தில் வீழ்ச்சி தென்படும் வைத்தியச் செலவுக்கு இடமுண்டு. இன்று வருத்தம் வரினும் பெரும் முறையில் கவனிக்கவும்.

தனு: இனிமையின் அழைப்பு இன்று உங்களுக்கு கிடைக்கும் இலம் பல்கலைக்கழகமாக மாறும் அறிஞர்களின் வருகை உங்களை உற்சாகப் படுத்தும் சாஸ்திர வழியாலும் கண்ணியம் சேரும்.

மகரம்: பேச்சுவார்த்தைகளில் உணர்ச்சி வசப்படாதிருப்பது விரும்பத்தக்கது. அவசர முடிவின் மூலம் விரோதத்தை தேடிக் கொள்வீர்கள் துதிபாடிக்கொண்டே சிலர் துரோகச் செயலில் ஈடுபடுவார்கள்.

கும்பம்: நினைத்தது நடக்கும் இன்பத்துக்களின் கொண்டாட்டமுண்டு பெரியோர்கள் ஆதரவும் உண்டு.

மீனம்: பயன்தரும் பிரயாணமொன்று மேற்கொள்ளப்படறாம் வெளியிடத் தொடர்புகள் பெருகும் கருத்துவேற்றுமைகள் மறைந்து நல்லமுடிவு ஏற்படும். கல்வித் துறையிலும் முன்னேற்றமுண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## வி. கழகங்களுக்கு உதவத்தயார்

[சுழிபுரம்]

"வட்டுக்கோட்டைத்தொகுதியிலுள்ள சகல விளையாட்டுக்கழகங்களும் தங்களுக்கு வேண்டிய எந்த உதவிகளையும் சங்கானை உதவி அரசாங்க அதிபரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம். எந்தநேரமும் உதவிஅரசாங்க அதிபர் திரு. ஆர். செந்தில்வடிவேல் விளையாட்டு அமைச்சின் உதவியைப் பெற்று உதவத்யாராகவுள்ளார்.

இவ்வாறு சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டிக்கு சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு குறிப்பிட்டார்.

சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் பதின்மூன்று கழகங்கள் பங்கு கொண்டன. ஆண்கள் பிரிவில் வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழகமும் பெண்கள் பிரிவில் சித்தன்கேணி மாதர் கழகமும் முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்டன. விழாவிற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. செந்தில்வடிவேல் தலைமை வகித்தார். சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி அதிபர் திரு எஸ். அருணாசலம், திரு. கா. அரிச்சந்திரா ஆகியோர் உரையாற்றினர். (கு)

## வருடாந்த உற்சவம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 4ம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது. இம்மாதம் 17ம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (கு)

## பற்றுக்குறை

(சித்தன்கேணி)

அராலி இந்துக்கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியர்கள் பற்றுக்குறையாக இருப்பதாக கல்லூரிஅதிபர்திரு.எஸ் தாஸ் வட்டு எம் பி திரு தா. திருநாவுக்கரசுவுக்கும் வட்டாரக் கல்வி அதிகாரி சண்முகராசாவுக்கும் கோரிக்கை விடுத்துள்ளார். (கு)

நியூ கேம்பிறிட்ஜ்
மேல் மாடிக் கட்டிடம்
திருநெல்வேலி சந்தி
யாழ்ப்பாணம்.
ஆரம்பம்: 14-4-81
புதிய G. C. E. (O/L) Dec
(O/L) August
பகல், மாலை, வார இறுதி வகுப்புக்கள்
SHORT HAND தமிழ்
TYPING ENGLISH
BOOK-KEEPING சிங்களம்
மற்றும் வர்த்தக, விஞ்ஞான
பாடங்களும்
மேலதிக விபரங்கட்கு
V. M. PACKKIYANATHAN

ஈழநாடு
The Eelanaadu
60 சதம்

டில்கா ரேடியோ அன் ரீவி

டெக்னீஷியன்ஸ் பல்நிலையம் எதிர்மேல்மாடி
உங்கள்
ரேடியோக்கள்
டேப்றெக்கோட்டர்கள்
மின்சார உபகரணங்கள்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
எதுவானாலும்
உடன் சீரமைத்துக் கொள்ள,
202, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## இளம் பெண் மரணம்

(மன்னார்)

தனக்குத் தானே தீமூட்டிக் கொண்ட 18 வயது இளம் பெண் மன்னார் அரசினர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

பலத்த எரிகாயங்களுடன் மன்னார் அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட இவர், அடுத்தநாள் மரணமானார். இவரது மரணம் தொடர்பாக பொலிசார் புலன்விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ். கச்சேரியில்

## 12பேருக்கு மீண்டும் வேலை

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் நடந்த வேலைநிறுத்தத்தைத் தொடர்ந்து வேலையிழந்தவர்களில் மேலும் 12 பேர்களுக்கு யாழ் அரசாங்க செயலகத்தில் மீண்டும் வேலைவழங்கப்பட்டுள்ளது.

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா, யாழ்ப்பாணம் வந்திருந்தபோது யாழ். ஜேட்டரி கழகத் தலைவர் சட்டத்தரணி ஆர் பாலசுப்பிரமணியம் வேலைநீக்கம் செய்யப்பட்டவர்கள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்தி மீண்டும் அவர்களுக்கு வேலைவழங்குமாறு கோரியிருந்தார். இதுதொடர்பாக பிரதமரிடம் மகஜர் ஒன்றையும் அவர் சமர்ப்பித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து தேசிய கந்தோரிலும் கூட்டுறவு உதவி ஆணையாளர் காரியாலயத்திலும், மீண்டும் சிலருக்கு வேலைவழங்கப்பட்டுள்ளது.

திரு. ஆர். பாலசுப்பிரமணியம், கடந்தவாரம் கொழும்பு சென்று சம்பந்தப்பட்ட இலாகா உத்தியோகத்தர்களை நேரில் சந்தித்து வலியுறுத்தியிருந்தார். இதனைத் தொடர்ந்து இவ்விடயம் துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார், யாழ்ப்பாணப் பகுதிகளிலுள்ள வீடமைப்பு இலாகாவைச் சேர்ந்த வேலைநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்கள் இம்மாதம் 4ம் தேதி நேரில் விசாரணை செய்வதற்கு வீடமைப்பு இலாகா தலைமைக் காரியாலயத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர். (க)

## மாணவிகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவி ஒருவர் நேற்று ரயில் விபத்துக்குள்ளாகி யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விமலேஸ்வரி என்ற 24 வயதான இம்மாணவி கொக்குவில் ரயில் நிலையத்தில் மண்கும்பி யொன்றின்மீது ஏறுகையில் தடக்கி விழுந்தபொழுது ரயிலினால் மோதுண்டார் என்று கூறப்படுகின்றது. மாணவியின் ஒருகால் முழங்காலுடன் துண்டிக்கப்பட்டிருப்பதுடன் மற்றக்காலில் பலத்த காயம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிகின்றது. இம்மாணவி விபத்துக்குள்ளானதும் அயலிலுள்ள பொதுமக்கள் முதல் உதவிபுரிவதிலும் ஆஸ்பத்திரிக்கு அனுப்புவதிலும் பெரிதும் உதவிபுரிந்துள்ளனர்.

### பொதுமக்கள் கோரிக்கை மீது

## திறப்புவிழாவை பகிஷ்கரித்த வட்டு எம். பி.

(சித்தன்கேணி)

சங்கானை பட்டினசபையினால் நிர்மாணிக்கப்பட்ட புதிய சந்தையை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் திறந்து வைத்தார்.

புதிய சந்தையை வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு திறந்து வைப்பதற்கு முதலில் செயற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதனைத் தொடர்ந்து சந்தையை அவர் திறந்துவைப்பதற்குச் சென்றபோது சங்கானைப் பட்டினசபையின் நிர்வாகம் சீர்

(4ம் பக்கம் பார்க்க)



முதலாம் ஆண்டு நினைவாஞ்சலி

K P. செல்லையா

உரிமையாளர், ராஜா றைஸ்மில், கொக்குவில்.

தோற்றம்! 22-3-1908

மறைவு: 12-4-1980

அன்பின் திருவுருவே
ஆதரவில் ஆசானே
இன்பத்தின் இருப்பிடமே
ஈகையின் பிறப்பிடமே
உம்மையிழந்து இன்றுடனே
ஊர்ந்ததுவோ ஓராண்டு...?
எம்மனதில் அகலாமல்
ஏற்றமுற வாழ்கின்றீர்.
ஆண்டு இருளாய்க் கடந்தாலும்
அன்புமுகம் நினைந்து-உங்கள்
ஆன்மா சாந்தி பெற
அவன் கழல்கள் பணிகின்றோம்!

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

8719

## புங்குடுதீவு ரூ. 98 ஆயிரம் கொள்ளை:

# நான்கு பேர் குற்றவாளிகள்; இருவர் விடுதலையாகினர்

### தீர்ப்பு ஏப். 14-ந் திகதிக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு 98,000 ரூபா கொள்ளை வழக்கில் 3ம், 5ம் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர். 1ம், 2ம், 4ம், 6ம் எதிரிகள் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டு தண்டனை வழங்குவது எதிர்வரும் 14ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரிகள் தரப்புச் சட்டத்தரணிகள் என் ஸ்ரீகாந்தா, பி. கைலாசநாதன் இருவரும் தமது தொகுப்புரையை நிகழ்த்தினர். இதையடுத்து பொலிஸ் தரப்பு சட்டத்தரணி திரு. கே. வி. நவரத்தினம் பதிலுரை வழங்கியதைத் தொடர்ந்து தீர்ப்பளிக்கப்பட்டது.

கடந்த பல மாதங்களாக விசாரிக்கப்பட்டுவந்த இவ்வழக்கில் சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியது, பயங்கர ஆயுதங்கள் தாங்கி வீடு உடைத்து நகைகள் உட்பட 98,000/- ரூபா பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்தது தொடர்பாக பத்துக் குற்றச்சாட்டுகள் எதிரிகள் மீது சுமத்தப்பட்டிருந்தன.

## புனரமைப்பு

(உடுப்பிட்டி)

வல்வெட்டித்துறைப்பகுதியிலுள்ள தீருவில் குளம், தேசிய இளைஞர்சேவை மன்றத்தினால் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை உடுப்பிட்டித்தொகுதி தேசிய இளைஞர் சேவை மன்ற அதிகாரி செல்வி எஸ். மகேஸ்வரி மேற்கொண்டுவருகின்றார்.

இப்புனரமைப்பு வேலைகளில் சுமார் 25 இளைஞர்கள், யுவதிகள் ஈடுபடுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

தேவை

யாழ்ப்பாணத்தில் முன்னணியில் திகழும் நாகரிக கோப்பியாருக்கு காசாளர்-பில்கிளார்க் உடன் தேவை. வயதெல்லை இடையாது. பிணைப்பணம் செலுத்துபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 8746, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 8746

வேண்டிய டிசைன்களில் துணி வெட்டவும், தைக்கவும் பெண்பிள்ளைகள் தேவை. நேரில் வரவும். நகுலாம்பிகை, 181, அரசடிரோட், (றெயில்வே கடவைக்கு அருகில்) கந்தர்மடம். 8730

பயிற்சி

ரேடியோ - டெலிவிசன், ஏயர்கொண்டிசனிங், வெல்டிங், மூன்றுமாத டிப்ளோமா பயிற்சிகள் சனி, ஞாயிறு வகுப்புக்கள் 3-4-81 வரை மாணவர் அனுமதிக்கப்படுவர். நாஷனல் அக்கடமி, மொம்சாக் கட்டிடம், 11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 8729

V. R. V. போக்குவரத்துச் சேவை

யாழ். → திருமலை | திருமலை → யாழ்.

ஒரு வழிக் கட்டணம் ரூபா 25/-மட்டும்

யாழ். நகரிலிருந்து காலை 6 மணிக்குப் புறப்பட்டு, பகல் 12-00 மணிக்கு திருமலையையடையும். திருமலையிலிருந்து மாலை 2 மணிக்குப் புறப்பட்டு இரவு 8-00 மணிக்கு யாழ்ப்பாணத்தையடையும்.

ஆசனங்கள் பதிவுசெய்யுமிடங்கள்:

யாழ்: 1. றிக்கோ சுவிற்ஸ் அன் கிறீம் ஹவுஸ் போன்: 464, 7889
2. V. R. V. ரான்ஸ்போட், சேகரம் கட்டிடம், கொட்டடி, போன்: 8162

திருமலை: நெஸ்கபே, 401, டொக்யாட் வீதி, திருகோணமலை, போன்: 482.

பிரயாணிகள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே காப்புறுதி செய்யப்பட்ட சேவை!

வசதியான சேவை!! சொகுசான பஸ் சேவை!!!

## மரண அறிவித்தல்

### ஆசைப்பிள்ளை வீரசிங்கம்

(யாழ், செனித் வாச்கம்பனி உரிமையாளர்)

நல்லூரைச் சேர்ந்த திரு ஆசைப்பிள்ளை வீரசிங்கம் காலமாகிவிட்டார். இவர் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், திருமதி சாவித்திரி சின்னத்துரை (சிங்கப்பூர்), திருமதி சகுந்தலாதேவி சம்பந்தர் (மலேஷியா) ஆகியோரின் சகோதரரும், திருமதி ஜெயகௌரி, ஜெயசிங்கம், ஜெயமலர் (U.K), ஜெயராணி, ஜெயசஸ்வரி, ஜெயகுமார், ஜெயராஜன், ஜெயபாலன் ஆகியோரின் தந்தையாரும், செந்திவேல் ராஜா, ராஜ்சந்திரன் (U. K) ஆகியோரின் மாமனாரும் ஜனன், ஞானு, ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரது தகனக்கிரியைகள் இன்று (01-04-81) புதன்கிழமை மாலை 4 மணியளவில் செம்மணி மயானத்தில் நடைபெறும்.

8745

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் நிர்வாகத்தினரால் ... வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் ஏப்பிரல் 1-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under No. GH 8948/78 The Eelanaadu P. B No. 49. Telegram: "Eelanaadu" Phone: 889 : 8196